**செய்தி வெளியீடு எண்: 478** **நாள்: 08.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஹஜ் குழு சட்டம், 2002—ன்படி, (மையச் சட்டம் 35/2002) தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, அரசாணை (நிலை) எண்.46, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் துறை, நாள்15.06.2020—ல், 12 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் முதல் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள பொதுப்பணித்துறை கூட்ட அரங்கில் 07.07.2020 அன்று நண்பகல் 12.00 மணியளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக கோவை யுனைடெட் ஜமாத் பொதுச் செயலாளர் திரு.A.அப்துல் ஜப்பார் அவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாணை (ப) எண்.41, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 07.07.2020ன்படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**